# அருள்மிகு சிவன் கோவில்
# சைவத் தமிழ்ச் சங்கம்
## 24வது ஆண்டு கலைவாணிவிழா 2017

www.sivankovil.ch www.anpesivam.com www.sivantv.com

## 01.01.2014 ற்க்கு பின் பிறந்தோர்.

* தேவார மனனப்போட்டி.

பண் : நட்டபாடை

**தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்**
**காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்**
**ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த**
**பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.**

**பொழிப்புரை:**

தோடணிந்த திருச்செவியை உடைய உமையம்மையை இடப்பாகத்தே உடையவனாய், விடை மீது ஏறி, ஒப்பற்ற தூய வெண்மையான பிறையை முடிமிசைச்சூடி, சுடுகாட்டில் விளைந்த சாம்பற் பொடியை உடல் முழுதும் பூசி வந்து என் உள்ளத்தைக் கவர்ந்தகள்வன், இதழ்களை உடைய தாமரை மலரில் விளங்கும் நான்முகன், படைத்தல் தொழில் வேண்டி முன்னை நாளில் வழிபட அவனுக்கு அருள்புரிந்த பெருமை மிக்க பிரமபுரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானாகிய இவன் அல்லனோ

பண் : இந்தளம்

**பித்தாபிறை சூடிபெரு**
**மானேயரு ளாளா**
**எத்தான்மற வாதேநினைக்**
**கின்றேன்மனத் துன்னை**
**வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூரருட் டுறையுள்**
**அத்தாஉனக் காளாய்இனி**
**அல்லேனென லாமே**

பொழிப்புரை:

பித்தனே, பிறையைக் கண்ணியாகச் சூடியவனே, பெருமை உடையவனே, பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரின்கண்ணதாகிய, ‘‘அருட்டுறை‘‘ என்னும் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, எனது நெஞ்சத்துள் உன்னை அகலாது வைத்தருளினாய் அதனால், எவ்வாற்றானும் உன்னை மறவாமலே நினைந்து, முன்பே உனக்கு அடியவனாகி, இப்பொழுது, ‘‘உனக்கு அடியவன் அல்லேன்‘‘ என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

அன்பார்ந்த பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.